
# உங்கள் வாடிக்கையாளரை தெரிந்து கொள்ளுங்கள் (KYC)

நிதியியல் கல்வி வாரம்
ஜூன் 5-9, 2017

வங்கிக் கணக்கை துவங்குவதற்கும், பராமரிப்பதற்கும் மிகவும் எளிதான அதே சமயம் மிகவும் அவசியமான ஒன்று KYC (அல்லது) உங்கள் வாடிக்கையாளரை தெரிந்து கொள்ளுங்கள்.




- வங்கிக் கணக்கை துவங்குவதற்கு ஒரு அடையாளச் சான்று, ஒரு வசிப்பிட சான்று மற்றும் ஒரு சமீபத்திய புகைப்படம் மட்டுமே போதுமானதாகும்.
- உங்களின் ஆதார் அட்டை, ஓட்டுனர் உரிமம், வாக்காளர் அடையாள அட்டை, கடவுச் சீட்டு அல்லது நரேகா (NREGA) அட்டை ஆகியவை அடையாளம் மற்றும் வசிப்பிடம் இரண்டிற்கும் சான்றாகப் பயன்படும்.
- வருமானவரி அட்டை (PAN) அடையாள சான்றாக மட்டுமே பயன்படும்.

- உங்களுடைய தற்போதைய வசிப்பிட முகவரி உங்கள் வசிப்பிட சான்றில் இருக்கும் முகவரியிலிருந்து வேறுபட்டால், உங்களின் புதிய முகவரியை அறிவித்தால் போதுமானது.

- அடையாள மற்றும் வசிப்பிட சான்று இல்லையென்றாலும், உங்களின் சமீபத்திய புகைப்படம் மற்றும் கையெழுத்தை கொண்டு சேமிப்பு வங்கி ‘சிறு கணக்கை’ துவங்க முடியும். வங்கிக் கணக்கில் ரூ.50,000 வரை இருப்பும், மாதம் ஒன்றிற்கு ரூ.10,000 வரை பணம் எடுக்கவும், ஒரு நிதியாண்டிற்கு மொத்தத்தில் ரூ.1.00 இலட்சம் வரை வரவு வைக்கவும் முடியும்.

- உங்கள் வாடிக்கையாளரை தெரிந்து கொள்ளுங்கள் (KYC) விவரங்களை, உங்களின் இடர் தகுதிக்கேற்ப (RISK PROFILE) 2, 8 அல்லது 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை வங்கி மறு உறுதி செய்யும்.

- வங்கியின் உங்கள் வாடிக்கையாளரை தெரிந்து கொள்ளுங்கள் (KYC) செயல்முறை சார்ந்த குறைகள் ஏதேனும் இருந்தால், உங்கள் வங்கியிடம் புகார் தெரிவிக்கவும். வங்கியின் பதிலில் திருப்தி இல்லையெனில், வங்கிக் குறை தீர்ப்பாளரிடம் புகார் தெரிவிக்கவும். விவரங்களுக்கு https://bankingombudsman.rbi.org.in என்ற வலைதளத்தை பார்க்கவும்.

விரிவான விவரங்களுக்கு
www.rbi.org.in/KYCFAQ
என்ற வலைதளத்தை பார்க்கவும்

நிதியியல் கல்வி ● வளமைக்கான வழி

KYC

நிதியியல் சேர்க்கை மற்றும் மேம்பாட்டுத்துறை
இந்திய ரிசர்வ் வங்கி
www.rbi.org.in